## புதுக்கோட்டை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

(21-09-2016 – 25-09-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

**தேதி: 20-09-2016**

**கடந்த கால வானிலை 16-09-2016 முதல் 19-09-2016 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 10.7 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 36-38 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 25-26 |
| மேக மூட்டம் | 4-6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 30-76 |
| காற்றின் வேகம்(கி.மீ / மணி) | 16-22 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 25-09-2016 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 21.09.16 | 22.09.16 | 23.09.16 | 24.09.16 | 25.09.16 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 3 | 3 | 3 | 0 | 3 |
| அதிக பட்ச வெப்பநிலை(செ) | 38 | 38 | 38 | 37 | 37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 27 | 27 | 27 | 26 | 26 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 60 | 60 | 60 | 64 | 64 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 42 | 42 | 42 | 46 | 46 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 19 | 19 | 19 | 19 | 19 |
| காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

**குறுஞ்செய்தி :**

- செப்டம்பர் 23-ம் தேதி தவிர, எதிர்வரும் ஐந்து நாட்களில், இலேசான தூறல் சில இடங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல் மற்றும் கரும்பு**

**பருவம்: குறுவை: பூக்கும் மற்றும் முதிர்ச்சி பருவம், சம்பா: விதைத்தல் மற்றும் நடவு**

- கடந்த சில நாட்களாக பெய்த மழையைப் பயன்படுத்தி சம்பா வயல்களை தயார் செய்யவும்.
- மானாவாரியில் சரியான சமயத்தில் விதைக்க ஏதுவாக விதைகள், விதைநேர்த்தி செய்ய பயன்படுத்தப்படும் மருந்துகள், இயற்கை உரங்கள் மற்றும் செயற்கை உரங்கள் போன்ற இடுபொருட்கள் வாங்கி தயார்நிலையில் வைத்திருக்கவும்.
- தொடர்ந்து வறண்ட வானிலை நிலவுவதால் ஒரு தென்னை மரத்திற்கு நாள்தொறும் 100 லிட்டர் தண்ணீரை சொட்டு நீர் பாசன முறையில் நீர் பாசனம் செய்யவும்.
- மழைக்காலம் ஆரம்பமாவதற்கு முன்பாக மாடுகளுக்கு சப்பை நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.